# செயலட்டை

**இஸ்லாம்** **தரம் - 11**

### அலகு 6 - அல் கழாஉ வல் கத்ர்

1. கழா, கத்ர் ஆகிய சொற்களின் மொழிக்கருத்துக்களைக் குறிப்பிடுக.
2. கழா கத்ர் இஸ்லாமிய அகீதாவில் எவற்றுடன் தொடர்புடையது?
3. கழா கத்ர் அகீதாவில் எப்பிரிவில் உள்ளடங்கும்?
4. பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டு ஈமான் சார்ந்த விடயங்களை சிந்தித்தமையினால் தோற்றம் பெற்ற வழிகெட்ட அகீதா சார் பிரிவுகளைக் குறிப்பிடுக.
5. கழா கத்ர் தொடர்பாக பகுத்தறிவுவாதிகளிடையே காணப்படும் இரு பிழையான நம்பிக்கைகளைக் குறிப்பிடுக.
6. அல்குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் கழா கத்ர் தொடர்பாக வலியுறுத்தப்படும் இரு விடயங்களும் எவை?
7. ஒரு மனிதன் தாயின் கர்ப்பத்தில் இருக்கும் போது நிர்ணயம் செய்யப்படும் நான்கு விடயங்களும் எவை?
8. அல்லாஹ்வின் நாட்டப்படியே அனைத்தும் நடைபெறுகின்றன என்பதை வலியுறுத்தும் அல்குர்ஆன் வசனங்கள் இரண்டை எழுதுக.
9. மனிதனது செயல்களுக்கு மனிதனே பொறுப்பாளி என்பதை வலியுறுத்தும் அல்குர்அன் வசனம் ஒன்றையும் ஹதீஸ் ஒன்றையும் குறிப்பிடுக.
10. அல்லாஹ்வின் கத்ரை ஏளனப்படுத்தியமைக்காக முப்பது கசையடிகள் வழங்கிய கலீபா யார்?
11. அல்லாஹ் கழா கத்ரை ஏற்படுத்தியமைக்கான காரணம் யாது?
12. இஸ்லாமிய அடிப்படையில் விதியை விசுவாசிப்பதால் கிடைக்கும் பயன்களைப் பட்டியலிடுக.

### அலகு 7 - ஸக்காத் (i)

1. ஸக்காத் என்ற சொல்லின் மொழிரீதியான கருத்துக்களைக் குறிப்பிடுக.
2. இஸ்லாமிய வழக்கில் ஸக்காத் என்றால் என்ன?
3. அல்குர்ஆனில் பல்வேறு இடங்களில் தொழுகையோடு இணைத்து குறிப்பிடப்படும் இபாதத் எது?
4. ஸக்காத்தின் முக்கியத்துவங்கள் 5 தருக.
5. ஸக்காத் வழங்காதவர்களுக்கு கிடைக்கவுள்ள தண்டனைகள் மூன்றைக் குறிப்பிடுக.
6. ஸக்காத்தின் மூலம் கிட்டும் பயன்கள் 8 தருக.
7. ஸக்காத் ஒரு கூட்டுக் கடமை என்பதற்கான சான்றுகள் 4 தருக.
8. ஸக்காத்தை கூட்டாக நிறைவேற்றுவதால் ஏற்படும் பயன்கள் 5 தருக

### அலகு 7 - ஸக்காத் (ii)

1. ஸக்காத் விதியாவதற்குரிய நிபந்தனைகள் (ஷர்த்துக்கள்) யாவை?
2. ஸக்காத்தின் பர்ளுகளைக் குறிப்பிடுக.
3. நிஸாப் என்றால் என்ன?
4. வருடம் பூர்த்தியாக வேண்டும் என்ற நிபந்தனையின்றி கைக்குக் கிடைத்தவுடன் ஸக்காத் கடமையாகும் பொருட்கள் எவை?
5. ஸக்காத் விதியாகும் பொருட்களை உதாரணங்களுடன் குறிப்பிடுக.
6. ஸக்காத் விதியாகும் பின்வரும் பொருட்களின் ஆரம்ப நிஸாபைக் குறிப்பிடுக.
   ஆடு, மாடு, ஒட்டகம், தானியங்கள், தங்கம், பணம்
7. ஸக்காத் பெறத் தகுதியான 8 கூட்டத்தினரையும் குறிப்பிடுக.

### அலகு 7 - ஸக்காத் (iii)

1. எவ்வகையான கால்நடைகளுக்கு ஸக்காத் விதியாக மாட்டாது?
2. பின்வருவனவற்றுக்கு ஸக்காத் வழங்கப்பட வேண்டிய அளவைக் குறிப்பிடுக.
   - 100 ஆடுகள்
   - 40 மாடுகள்
   - 25 ஒட்டகங்கள்
   - வெள்ளி
   - 500 ஆடுகள்
   - 05 ஒட்டகங்கள்
   - தங்கம்
3. ஸக்காத் பெறத் தகுதியானவர்கள் பற்றிக் குறிப்பிடும் அல்குர்ஆன் வசனத்தைக் குறிப்பிடுக.
4. ஸக்காத் பெறத் தகுதியற்றவர்கள் யாவர்?
5. ஒருவரிடம் 15 லட்சம் ரூபா பணம் இருக்குமெனின் அவர் ஸக்காத் வழங்க வேண்டிய பணத்தின் அளவு யாது?

### அலகு 8 - நேன்பின் தாற்பரியங்கள்

1. நோன்பைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் 'ஸவ்ம்' எனும் சொல்லின் மொழிக்கருத்துக்களைக் குறிப்பிடுக.
2. இஸ்லாமிய வழக்கில் நோன்பு என்றால் என்ன?
3. ஸவ்ம் எனும் சொல்லின் பன்மைச் சொல் யாது?
4. நோன்பின் சிறப்புக்கள் 5 தருக.
5. மறுமையில் அடியானுக்காக இறைவனிடம் மன்றாடும் இரு அமல்களும் எவை?
6. நோன்பாளிகளுக்கு உள்ள இரு சந்தோஷங்களும் எவை?
7. சுவர்க்கத்தில் நோன்பாளிகள் நுழையவென விஷேடமாக அமைக்கப்பட்ட வாயில் எது?
8. நோன்பினால் கிடைக்கும் பயன்கள் 5 தருக.
9. றமழான் மாதத்தின் சிறப்புக்களைக் குறிப்பிடுக.
10. பொறுமையின் மாதம் என சிறப்பித்துக் கூறப்படும் மாதம் எது?

11. “நான் வயிறார உண்டால் ஏழைகளின் பட்டினியை மறந்து விடுவேன் என அஞ்சுகிறேன்” எனக் கூறிய எகிப்தின் நிதி மந்திரியாகப் பணிபுரிந்த நபி யார்?
12. அல்குர்ஆன் நோன்பைக் கடமையாக்கியதன் பிரதான நோக்கம் யாது?
13. ரமழான் மாதத்தில் அதிகமதிகம் ஈடுபடவேண்டிய நற்செயல்களைக் குறிப்பிடுக.
14. லைலத்துல் கத்ர் இரவு பற்றி விளக்கம் தருக.
15. நோன்பின் சிறப்பை எடுத்துக்காட்டும் இரு ஹதீஸ்களைத் தருக.

**அலகு 9 - ஹஜ்ஜும் உம்ராவும் (i)**

1. ஹஜ்ஜின் நிபந்தனைகளைக் (ஷர்த்துக்கள்) குறிப்பிடுக.
2. ஹஜ்ஜின் அர்கான்கள் (பர்ளுகள்) யாவை?
3. பித்யா என்றால் என்ன?
4. ஹஜ்ஜின் வாஜிபுகளைக் குறிப்பிடுக.
5. ஹஜ்ஜின் போது வாஜிபு ஒன்று விடுபட்டால் அதற்காக நிறைவேற்ற வேண்டிய பித்யாவைக் குறிப்பிடுக.
6. இலங்கையிலிருந்து ஹஜ்ஜுக்குச் செல்வோர் நிய்யத் வைக்கவேண்டிய இடம் யாது?
7. அய்யாமுத் தஷ்ரீக்குடைய நாட்களைக் குறிப்பிடுக.
8. மூன்று வகையான ஜம்ராக்களையும் குறிப்பிடுக.
9. ஹஜ்ஜுக்கும் உம்ராவுக்குமான ஸுன்னத்துக்களைக் குறிப்பிடுக
10. ஹஜ்ஜின் போது பித்யா கொடுக்க வேண்டியசந்தர்ப்பங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

**அலகு 9 - ஹஜ்ஜும் உம்ராவும் (ii)**

1. ஹஜ்ஜுக்கும் உம்ராவுக்குமிடையிலான பிரதான வேறுபாடு யாது?
2. தவாபின் மூன்று வகைகளையும் அவை பர்ளு, சுன்னத், வாஜிப் என்பவற்றில் எதில் உள்ளடங்குகின்றது என்பதையும் குறிப்பிடுக.
3. ஹஜ்ஜின் முஹர்ரமாத்களைக் (தடைசெய்யப்பட்டவை) குறிப்பிடுக.
4. ஹஜ்ஜையும் உம்ராவையும் நிறைவேற்ற நிய்யத் வைக்கும் முறைகள் மூன்றையும் குறிப்பிடுக.
5. ஹஜ் கடமை நிறைவேற்றப்படும் கால எல்லை யாது?
6. ஹஜ்ஜுடன் தொடர்புடைய தலங்கள் 5 தருக.
7. “ஹஜ்ஜானது அனைத்து இபாதத்துக்களினதும் இயல்புகளை உள்ளடக்கியதான ஒரு சிறந்த வணக்கமாகும்” எனக் கூறிய இமாம் யார்?
8. ஹஜ்ஜின் பயன்களைக் குறிப்பிடுக.

**அலகு 10 - இஸ்லாத்தின் புனிதஸ்த்தலங்கள் (i)**

1. இஸ்லாத்தில் புனித யாத்திரை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள மூன்று புனிதஸ்த்தலங்களும் எவை?
2. பின்வரும் பள்ளிகளில் நிறைவேற்றப்படும் ஒரு தொழுகை ஏனைய பள்ளிகளில் நிறைவேற்றப்படும் எத்தனை தொழுகைகளுக்குச் சமனானது என்பதைக் குறிப்பிடுக. மஸ்ஜிதுல் ஹராம் - மஸ்ஜிதுந் நபவி - மஸ்ஜிதுல் அக்ஸா
3. உலகில் முதன் முதலாக அமைக்கப்பட்ட இறை இல்லம் எது?
4. மக்காவின் பழைய பெயர் யாது?
5. கபத்துல்லாஹ்வின் கட்டுமானத்தடன் தொடர்புபடும் நபிமார்களைக் குறிப்பிடுக.
6. ஜுர்ஹும் குலத்தினரால் மூடப்பட்ட ஸம்ஸம் கிணறு மீண்டும் யாரால் கண்டுபிடிக்கப்பட்டது.
7. முஸ்லிம்களின் முதல் கிப்லா எது? அது எங்கு அமைந்துள்ளது?
8. மக்கா வெற்றிகொள்ளப்பட்ட ஹிஜ்ரி ஆண்டு எது?

**அலகு 10 - இஸ்லாத்தின் புனிதஸ்த்தலங்கள் (ii)**

1. மஸ்ஜிதுல் அக்ஸாவை முதன் முதலில் கட்டிய நபி யார்?
2. மஸ்ஜிதுல் ஹராம் - மஸ்ஜிதுல் அக்ஸா ஆகிய பள்ளிவாயில்கள் எத்தனை வருடகால இடவெளியில் கட்டப்பட்டன.
3. இஸ்ரா என்றால் என்ன?
4. மி∴ராஜ் சம்பவம் நிகழ்ந்த ஆண்டு எது?
5. மி∴ராஜின் போது மஸ்ஜிதுல் அக்ஸாவில் முன்னைய அனைத்து நபிமார்களுக்கும் இமாமாக நின்று தொழுகை நடாத்தியவர் யார்?
6. உமர் சாசனம் என்றால் என்ன?
7. நபி (ஸல்) அவர்களுக்குப் பின் மஸ்ஜிதுல் அக்ஸாவில் தொழுத முதல் நபர் யார்?
8. முஸ்லிம்களுக்கும் ஐரோப்பிய கிறிஸ்தவர்களுக்குமிடையில் சிலுவைப் போர் நடைபெற்ற காலப்பகுதியைக் குறிப்பிடுக.
9. சிலுவை வீரர்களிடமிருந்து மஸ்ஜிதுல் அக்ஸாவையும், பலஸ்தீனையும் மீட்டெடுத்த இஸ்லாமியத் தளபதிகள் இருவரைக் குறிப்பிடுக.
10. இஸ்லாமிய கிலாபத் வீழ்ச்சியடைந்த ஆண்டு எது?
11. பலஸ்தீனத்தில் இஸ்ரேல் எனும் நாடு பலவந்தமாக உருவாக்கப்பட்ட ஆண்டு எது?
12. மஸ்ஜிதுல் அக்ஸாவும் ஷாம் பிரதேசமும் சிறப்புப் பெறக் காரணம் யாது?

**அலகு 10 - இஸ்லாத்தின் புனிதஸ்த்தலங்கள் (iii)**

1. இஸ்லாத்தில் இரண்டாவது ஆன்மீக அந்தஸ்த்தைப் பெறும் மஸ்ஜித் எது?

2. எந்த ஸஹாபியின் வீட்டில் இருந்து கொண்டு நபி (ஸல்) அவர்கள் மஸ்ஜிதுந் நபவியின் நிர்மானப் பணிகளை ஆரம்பித்தார்கள்?
3. மஸ்ஜிதுந் நபவியைக் கட்டுவதற்கு தேர்வு செய்த இடம் யாருக்குச் சொந்தமானதாக இருந்தது? அவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
4. அஸ்ஹாபுஸ் ஸுஃப்பா என்றால் என்ன?
5. மஸ்ஜிதுந் நபவியை விரிவு படுத்திய கலீபாக்கள் இருவரைக் குறிப்பிடுக.
6. மஸ்ஜிதுந் நபவியை விஸ்தரிப்பு செய்த நான்கு ஆட்சியாளர்களைக் குறிப்பிடுக.
7. மஸ்ஜிதுந் நபவியை இறுதியாக விரிவு படுத்தியவர் யார்?
8. நபி (ஸல்) அவர்களின் காலத்தில் மஸ்ஜிதுந் நபவி ஆற்றிய பணிகளைக் குறிப்பிடுக.

ESTD 1956
KNOWLEDGE IS POWER
வாழக்கற்போம்
V/DHARUL ULOOM MUSLIM MAHA VIDYALAYAM
ربي زدني علما